நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்

முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, எல்.எல்.எம்.,

நீதித்துறை நடுவர், மேலூர்

**2026** ஆம் ஆண்டு ஜீலை மாதம் **28-**ஆம் நாள் செவ்வாய்கிழமை

ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்**.17/2013**

**CNR.No. TNMD16-000077-2013**

**...**

| | | |
|---|---|---|
| குற்றம் முறையிடுபவர் | : | அரசுக்காக காவல் ஆய்வாளர்<br>மேலூர் காவல்நிலையம்<br>குற்ற எண்.174/2012 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | : | வாசுதேவன், (வயது 49/2026)<br>த/பெ.நயினார் அம்பலம்<br>ஏரக்காபட்டி, சமுத்திராபட்டி அஞ்சல்,<br>நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். |
| குற்றம் முறையிடப்பட்டது | : | எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.ச |
| குற்றம் வனையப்பட்டது | : | எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்டநாள் | : | 07.03.2012 |
| இறுதி அறிக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் | : | 21.02.2013 |
| பல்வகை மனு மற்றும் அதன் முடிவு | : | Nil |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | : | |

| | Chief | Cross |
|---|---|---|
| PW1 | 17.10.2013 | 17.10.2013 |
| PW2 | 18.08.2014 | 18.08.2014 |
| PW3 | 18.08.2014 | Nil |
| PW4 | 18.08.2014 | 18.08.2014 |
| PW5 | 18.08.2014 | 18.08.2014 |
| PW6 | 02.09.2016 | Nil |
| PW7 | 02.09.2016 | Nil |
| PW8 | 10.03.2017 | 10.03.2017 |
| PW9 | 15.03.2019 | 15.03.2019 |



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:22 +0530

| | | |
|---|---|---|
| PW10 | 15.03.2019 | 15.03.2019 |
| PW11 | 02.02.2026 | 02.02.2026 |
| PW12 | 29.06.2026 | 29.06.2026 |

| | | |
|---|---|---|
| குற்றவியல் விசாரணை முறைச்சட்டம் பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் எதிரிகளை விசாரித்த நாள் | : | 24.07.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம் மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம் | : | N.A |
| மேல் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | : | N.A |
| தீர்மானம் | : | எதிரி பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று தீர்மானம். |
| தீர்ப்பு | : | முடிவாக, இவ்வழக்கில் எழுந்துள்ள ஒட்டுமொத்த சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து, எதிரி பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும். |

இவ்வழக்கானது கடந்த 22.04.2013-ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 28.07.2026 அன்று என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை-1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.பூமிநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை :-</u>

எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:28 +0530

**1)** <u>குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்</u> **:**

கடந்த 02.03.2012-ம் தேதி பகல் 12.12 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவர் TN 59 BZ 3233 பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிளில் மேலூர் வந்து விட்டு பின் தனது ஊருக்கு செல்வதற்காக மேலூர் - திருச்சி மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக மேலூர் TNSTC டெப்போ தாண்டி யூகோ பேங்க் எதிர்புறமாக சென்றபோது எதிர் திசையில் வந்த எதிரி TN 58 T 3717 டாடா ACE வண்டியை அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டி வந்து சுரேஷ் மீது மோதி அவருக்கு நடுநெற்றி மற்றும் தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பை ஏற்படுத்தியும், மோட்டார் சைக்கிளுக்கு சேதத்தையும் ஏற்படுத்திய தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்தவர்களாகிறார் என்று மேலூர் காவல் நிலைய ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2)** இவ்வழக்கு ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.17/2013 ஆக இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு இவ்வழக்கின் எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கின் எதிரி அழைப்பாணையின் பேரில் நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் குவிமுச பிரிவு 207-ன் கீழாக எதிரிக்கு வழக்கு ஆவணங்கள் அனைத்தும் இலவசமாக வழங்கி, போதிய அவகாசம் கொடுத்து, எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன்கீழ் குற்ற முகாந்திரம் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. குற்றசாட்டிற்கு போதிய முகாந்திரம் இருந்ததால் 01.07.2013 அன்று எதிரி மீது குற்ற முகாந்திரம் எடுத்துரைத்து தமிழில் வாசித்து விளக்கி கேட்டபோது எதிரி குற்றத்தை மறுத்துரைத்துள்ளார். எனவே வழக்கு அரசு தரப்பு சாட்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.

**3)** அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.10 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. வழக்கு விசாரணையின் போது, அ.சா.1-ன் மூலம் அ.சா.ஆ.1-ம், அ.சா.3-ன் மூலம் அ.சா.ஆ.2-ம், அ.சா.7-ன் மூலம் அ.சா.ஆ.3-ம், அ.சா.8-ன் மூலம் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5-ம், அ.சா.11-ன் மூலம் அ.சா.ஆ.6 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

<u>**4)** அரசு தரப்பில் சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து தெரியவரும் வழக்கின் சுருக்கம்</u> **:-**

**4.1)** அ.சா.1 அய்யணன் தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்துபோன சுரேஷ் தனது மகன் என்றும், சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பாக 2-ம் தேதி தனது மகன் சுரேஷ் அவருக்கு



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:32 +0530

தெரிந்த புகழேந்தி என்பவரது இருசக்கர வாகனத்தில் மேலூர் சென்றுவிட்டு ஊருக்கு திரும்பும் வழயில் யூகோ வங்கி அருகே ஒரு டாடா வாகனத்தை வாசுதேவன் என்பவர் கவனக்குறைவாகவும், தவறான திசையிலும் ஓட்டிவந்து தன் மகன் வந்த வாகனத்தின் மீது மோதி தன் மகன் கீழே விழுந்து காயம்பட்டு கிடப்பதாக கேள்விபட்டு தான் உடனடியாக போய் பார்த்தபோது தன் மகன் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார் என்றும், அவரது சடலத்தை மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றும், இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் தான் புகார் செய்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.2)** அ.சா.2 குணசேகரன் தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் மேலூர் யூகோ பேங்க் அருகே நடந்துபோய் கொண்டு இருந்தார் என்றும், விபத்து நடந்ததை பார்த்தார் என்றும், பைக்கும், டாடா ஏசும் மோதி விபத்து என்றும், காயம்பட்டவரின் பெயர் தெரியாது என்றும், கொங்கம்பட்டியை சேர்ந்தவர் என்று சொன்னார்கள் என்றும், டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது என்றும், டாடா ஏஸ் வாகனம் தான் வேகமாக வந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.3)** அ.சா.3 முரளிபால்கண்ணன் தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி பணியில் இருந்தபோது அன்று மாலை 3.30 மணியளவில் மேலூர் காவல்நிலையத்திலிருந்து பெறப்பட்ட கடித எண்.174/12, இ.த.ச பிரிவுகள் 279, 304(A) நாள் 02.03.2012 தலைமைக்காவலர் பழனியப்பன் பிரேத பரிசோதனை மேற்கொண்டார் என்றும், பிரேத பரிசோதனை அன்று மாலை 4 மணியளவில் ஆரம்பித்தார் என்றும், பிரேதம் விரைத்து காணப்பட்டது என்றும், பிரேதத்தில் கைவிரல்கள் மற்றும் கால்விரல்கள் வெளிரி காணப்பட்டது என்றும், தலையில் நடுப்பக்கத்தில் ஆழத்தில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது என்றும், கபாலத்தை அறுத்து ஆய்வு செய்தபோது முன்பக்க மற்றும் நடுபக்க மூளையில் 5x3x2 அளவிலான ஒரு வீக்க காயம் காணப்பட்டது என்றும், கபாலத்தில் முன்பக்கம் மற்றும் நடுபக்கம் கபால எழும்பு 10 x 3x d ஆழத்தில் உடைந்து காணப்பட்டது என்றும், மற்ற உறுப்புகளை அறுத்து ஆய்வு செய்தபோது கீழ்கண்டவற்றை பதிவு செய்தார் என்றும், அ.சா.ஆ.2 உடல் கூராய்வு சான்று வழங்கினார் என்றும், இருதயத்தின் வலது பக்கம் திரவமும் இடது பக்கம் காலியான நிலையில் இருந்தது என்றும், மற்ற உறுப்புகள் சிறுநீரகங்கள், கல்லீரல், மண்ஈரல், நுரையீரல் அறுத்து ஆய்வு செய்தபோது வெளிரி காணப்பட்டது என்றும், நீர்ப்பை காலியான நிலையில் இருந்தது என்றும், மூளையின் மற்ற பாகங்கள் வெளிரி காணப்பட்டது



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:37 +0530

என்றும், இரைப்பையை அறுத்து ஆய்வு செய்தபோது 150 மி.லி அளவிலான பகுதிநிலையில் செறிக்கப்பட்ட உணவு காணப்பட்டது என்றும், சிறுகுடலை அறுத்து ஆய்வு செய்தபோது 15 மி.லி அளவிலான பித்தநீர் காணப்பட்டது என்றும், இதில் இருந்து தான் கூறும் சான்று இறந்த நபருக்கு அதிகப்படியான காயங்கள் ஏற்பட்டியிருப்பதால் அதிர்ச்சி மற்றும் அதிகப்படியான காயங்கள் ஏற்பட்டியிருப்பதால் அதிர்ச்சி மற்றும் அதிகப்படியான ரத்தம் போக்கினாலும் பிரேத பரிசோதனை செய்வதற்கு 4 முதல் 6 மணி வரை முன்பாக இறந்து இருக்கலாம் என்று சான்று அளித்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.4)** அ.சா.4 சிவராஜன் தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் சூர்யா சர்வீஸ் ஸ்டேசனில் சர்வீஸ் செய்தபோது சூர்யா சர்வீஸ் ஸ்டேசன் முன்பாக பைக்கும், டாடா ஏசும் விபத்து நடந்ததை நேரடியாக பார்த்தார் என்றும், திருவள்ளுர் பேருந்து சென்னை நோக்கி சென்று கொண்டிருந்த பொழுது அந்த பேருந்திற்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் திருவள்ளுர் பேருந்தை முந்தி செல்லுவதற்காக வேகமாக ஓட்டி வந்த பொழுது எதிரே வந்த டாடா ஏஸ் வண்டியின் மீது மோதி முன்பக்க கண்ணாடியில் மோதி மேலே சென்று கீழே விழுந்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.5)** அ.சா.5 சுப்பிரமணி தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி மதியம் சுமார் 12.15 மணியளவில் சூர்யா சர்வீஸ் ஸ்டேசனில் சர்வீஸ் செய்தபோது சத்தம்கேட்டு சென்று பார்க்க போகும் பொழுது தனது உரிமையாளர் தன்னை சர்வீஸ் செய்ய வேலை இருக்கிறது என்று தன்னை அழைக்க தான் சென்றுவிட்டார் என்றும், எதிரே வந்தவர்களிடம் தான் கேட்க பைக்கும், டாடா ஏசுக்கும் விபத்து என்று சொல்ல கேள்விபட்டார் என்றும், விபத்து நடந்த இடத்தில் கூட்டம் இருந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.6)** அ.சா.6 சிவலிங்கம் தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி பகல் 12 மணிக்கு மேலூரில் பி.ஆர.சி.பஸ் டெப்போ அருகிலுள்ள கோகுலம் டீக்கடையில் பஸ்ஸிற்கு செல்வதற்காக நின்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது டாடா ஏ.சி வாகனம் வடக்கிலிருந்து தெற்குநோக்கி நல்ல வேகமாக வந்துகொண்டிருந்தது என்றும், அப்பொழுது பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்குநோக்கி செக்போஸ்ட் நோக்கி ரோட்டின் இடது ஓரமாக ஒருவர் சென்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது டாடா ஏ.சி வாகனம் வேகமாக வந்ததால் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில் மோதியது என்றும், அவ்வாறு மோதியதில் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில் வந்தவருக்கு முகம் மற்றும் தலையில் அடிபட்டது என்றும், அதனால் பயங்கரமாக ரத்தம் வந்து அந்த இடத்திலேயே பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்தவர்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:42 +0530

இறந்துவிட்டார் என்றும், பஜாஜ் இருசக்கர வாகனமும் நொறுங்கிவிட்டது என்றும், பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்தவரின் பெயர் சுரேஷ் என்றும், அவர் கொங்கம்பட்டியை சேர்ந்தவர்கள் என்றும், அங்கிருந்தவர்கள் கூறினார்கள் என்றும், பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்த நபரின் வயது சுமார் 22 இருக்கும் என்றும், டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்தவர் பெயர் வாசுதேவன் என்று தெரிந்துகொண்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.7)** அ.சா.7 செல்வகுமார் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், அது பார்வை மகஜரிலுள்ள முதல் கையொப்பம் என்றும், கடந்த 02.03.2012-ம் தேதி பகல் சுமார் 1 மணியிலிருந்து 1.30 மணிக்குள் மேலூர் - திருச்சி ரோட்டிலுள்ள யுகோ பேங்க் அருகில் தானும், தன் நண்பர் முத்துக்குமாரும் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தபோது 3, 4 நபர்களும், உதவி ஆய்வாளர் மற்றும் ஒரு போலீசும் நின்றுகொண்டிருந்தார்கள் என்றும், என்னவென்று தான் விசாரித்தபோது அந்த இடத்தில் அன்று பகல் 12 மணியளவில் விபத்து நடந்ததாகவும், அது சம்மந்தமாக விசாரித்துக்கொண்டிருப்பதாகவும் சொன்னார்கள் என்றும், பின்பு உதவி ஆய்வாளர் அந்த இடத்தை பார்வையிட்டு ஒரு வரைபடம் வரைந்தார் என்றும், அதற்கு சாட்சியாக வரைபடம் பற்றி எழுதியிருந்த பேப்பரில் தானும், முத்துக்குமாரும் கையொப்பம் செய்தார்கள் என்றும், அந்த கையொப்பம் தான் மேற்கண்ட கையொப்பமாகும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.8)** அ.சா.8 விஜய் தனது சாட்சியத்தில் கடந்த 07.03.2012-ம் தேதி மேலூர் காவல்நிலைய குற்ற எண்.174/2012 வழக்கில் சம்மந்தப்பட்ட இலகுரக சரக்கு வானகத்தை ஆய்வு செய்தபொழுது வாகனத்தின் முன்புற வலதுபக்க ரியர் மிரர் உடைந்து காணப்பட்டது என்றும், மேலும் வாகனத்தின் முன்புற வலதுபக்க பேனலில் சிராய்ப்புகள் காணப்பட்டன என்றும், மேற்படி வாகனத்தில் எவ்வித இயந்திரகோளாறும் இல்லை என்றும், பின்னர் 09.03.2012-ம் தேதி மற்றொரு வாகனத்தினை ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதத்தினை பெற்று மோட்டார் சைக்கிளை ஆய்வு செய்தபொழுது வாகனத்தின் முன்புற வலப்பக்க இன்டிகேட்டர் உடைந்து காணப்பட்டது என்றும், மேலும் வாகனத்தின் முன்புற வலப்பக்க வைசர் மற்றும் முகப்பு விளக்கு டுமில் சிராய்ப்பு காணப்பட்டது என்றும், மேலும் வாகனம் சாலையில் இயக்கக்கூடிய நிலையில் இல்லை என்றும், இருசக்கர வாகனத்தில் விபத்து ஏற்படுத்தக்கூடிய எவ்விதமான இயந்திர கோளாறுகளும் இல்லை என தெரியவந்தது என்றும், தன்னிடம் காட்டப்படும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தான் வழங்கியது தான் என்றும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:47 +0530

**4.9)** அ.சா.9 பழனியப்பன் தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி மேலூர் காவல்நிலையத்தில் தலைமைக்காவராக பணிபுரிந்தபோது குற்ற எண்.174/12, இ.த.ச பிரிவுகள் 279, 304(A) ஆக வழக்கு பதிவு செய்தார் என்றும், இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவரின் பிரேதப்பரிசோதனை செய்ய சார்பு ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தினை மேலூர் அரசு மருத்துவமனை சென்று பணி மருத்துவரிடம் தபாலை கொடுத்த சவங்கிடங்கில் வைத்து ஆண் பிரேதத்தை அங்க மச்ச அடையாளம் காண்பித்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.10)** அ.சா.10 முத்துக்குமார் தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து தன்னுடையது தான் என்றும், சுமார் 7 வருடங்களுக்கு முன்பாக மேலூரில் உள்ள யுகோ வங்கி எதிரே வைத்து போலீசார் சம்பவ இடத்தை பார்த்து பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்து தன்னிடம் கையெழுத்து கேட்டார்கள் தான் கையெழுத்து செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.11)** அ.சா.11 பாலமுருகன் தனது சாட்சியத்தில் தான் தற்போது திண்டுக்கல் மாவட்டம், தாலுகா காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறார் என்றும், இதற்கு முன்பு 02.03.2012-ம் தேதி 13.00 மணிக்கு மேலூர் காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது மேலூர், கொங்கம்பட்டியை சேர்ந்த அய்யனார் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பார்வையிட்டு மேலூர் காவல்நிலைய குற்ற எண்.174/2012, பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார் என்றும், அதன் பின்னர் காவல் ஆய்வாளர் திரு.மாடசாமி என்பவர் வெளி அலுவலில் இருந்ததால் அவரின் உத்தரவின்பேரில் தான் வழக்கை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே 13.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் செல்வகுமார், முத்துக்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.7 மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றும், பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அன்றைய தினமே 14.00 மணிக்கு மேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று சவகிடங்கில் இருந்த விபத்தில் இறந்த சுரேஷ் என்பவரின் பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் 14.00 மணியிலிருந்து 15.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டு அ.சா.ஆ.8 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார் என்றும், பின்னர் தலைமை காவலர் பழனியப்பன் என்பவர் மூலம் இறந்துபோன பிரேதத்தை பிரேத கூராய்வு மேற்கொள்ள வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பி வைத்தார்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:52 +0530

என்றும், மேற்படி தலைமை காவலர் பழனியப்பன் பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி பிரேத கூராய்வு முடியும் வரை உதவியாக இருந்து பிரேதத்தை நல்லடக்கம் செய்ய உறவினர்களிடம் ஒப்படைத்தார் என்றும், பின்பு சாட்சிகள் அய்யணன், குணசேகரன், சிவலிங்கம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், அதன் பின்னர் தொடர் புலன் விசாரணைக்கு வழக்கு கோப்புகளை காவல் ஆய்வாளர் திரு.மாடசாமி என்பவரிடம் ஒப்படைத்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**4.12)** அ.சா.12 மாடசாமி தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி மேலூர் காவல்நிலைய பொறுப்பில் சார்பு ஆய்வாளர் பாலமுருகன், அய்யன் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.174/2012, இ.தச. பிரிவுகள் 279, 304(A)-ன்படி வழக்கு பதிவு செய்து முதற்கட்ட புலன்விசாரணை முடித்து மேற்கட்ட புலன்விசாரணைக்கு தன்னிடம் வைத்த வழக்கு கோப்பை தான் தனது புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்ததில் முதல் விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் தயார் செய்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தை ஒத்தும், சாட்சிகளின் வாக்குமூலங்கள் சார்பு ஆய்வாளரிடம் கூறியதால் தன்னிடமும் சொன்னதால் தனியாக வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகளான சிவராஜ் மற்றும் சுப்பிரமணி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதற்கட்ட விசாரணை செய்த சார்பு ஆய்வாளர் பாலமுருகன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், தலைமை காவலர் பழனியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், கடந்த 07.03.2012-ம் தேதி வழக்கின் எதிரி நிலையத்தில் ஆஜரானவரை நிலையத்தில் வைத்து கைது செய்து நிலைய வசம் ஒப்படைத்து தக்க ஆவணங்களை தயார் செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தார் என்றும், பின்னர் இவ்வழக்கில் விபத்துக்குள்ளான வாகனம் TN 58 T 3717 பதிவெண் கொண்ட TATA ACE மற்றும் TN 59 BZ 3233 Bajaj Discover வாகனத்தை ஆய்வு செய்து சான்று வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளர் விஜய் என்பவரை விசாரித்து சான்று பெற்றுள்ளார் என்றும், கடந்த 30.03.2012-ம் தேதி இவ்வழக்கில் இறந்த நபருக்கு சடல கூராய்பு செய்த அரசு மருத்துவரை விசாரித்து அறிக்கை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தார் என்றும், இத்துடன் தனது புலன்விசாரணை முடித்து 30.03.2012-ம் தேதி எதிரி மீது பிரிவுகள் 279, 304(A) இ.த.ச-ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார் என்றும் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:53:57 +0530

**5)** <u>குற்றவியல் விசாரணை சட்டப்பிரிவு **313(1)(ஆ)-ன்** கீழான விசாரணை</u>

அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டதற்கு பின்னால் பதிவு செய்யப்பட்ட சாட்சிகளின் விசாரணையிலிருந்து குற்றம் சாட்டப்பட்டவருக்கு பாதகமாக தோன்றும் சங்கதிகளை குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் கீழ் குற்றம்சாட்டப்பட்டவரிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்று அரசு தரப்பு சாட்சிகளை மறுத்துவிட்டார். மேலும் அவர் தரப்பில் சாட்சிகள் உண்டா என வினவியபோது சாட்சிகள் இல்லை என்று சொன்னார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்று சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது.

**6)** <u>அரசு தரப்பு வாதம் பின்வருமாறு:</u>

அரசு தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி தான் குற்றம் புரிந்துள்ளார் என்று சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவும், எதிரி மீது உள்ள குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்குமாறு எடுத்துரைத்தார்.

**7)** <u>எதிரி தரப்பில் வாதம் பின்வருமாறு:</u>

எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் இவ்வழக்கில் அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை உறுதிபடுத்தும் வகையில் இல்லை என்றும், எனவே எதிரி மீது உள்ள குற்றம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.

**8)** <u>தீர்வு</u> **:-**

இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அனைத்து வழக்காவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டது.

**9)** அரசு தரப்பு வழக்குப்படி, கடந்த 02.03.2012-ம் தேதி பகல் 12.12 மணிக்கு இவ்வழக்கில் இறந்துபோன சுரேஷ் என்பவர் TN 59 BZ 3233 பஜாஜ் டிஸ்கவர் மோட்டார் சைக்கிளில் மேலூர் வந்து விட்டு பின் தனது ஊருக்கு செல்வதற்காக மேலூர் - திருச்சி மெயின்ரோட்டில் தெற்கிலிருந்து வடக்காக மேலூர் TNSTC டெப்போ தாண்டி யூகோ பேங்க் எதிர்புறமாக சென்றபோது எதிர் திசையில் வந்த எதிரி TN 58 T 3717 டாடா ACE வண்டியை அதிக வேகமாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டி வந்து சுரேஷ் மீது மோதி அவருக்கு நடுநெற்றி மற்றும் தலையில் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டு சம்பவ இடத்திலேயே இறப்பை



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:01 +0530

ஏற்படுத்தியும், மோட்டார் சைக்கிளுக்கு சேதத்தையும் ஏற்படுத்திய குற்றம் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

**10)** <u>இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில்</u>

i) சம்பவ தினத்தன்று எதிரி TN 58 T 3717 டாடா ACE வண்டியை ஓட்டி வந்தார் என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

ii) அவ்வாறு எனில் மேற்படி லாரியை எதிரி முரட்டுத் தனமாகவோ, அல்லது கவனக்குறைவாகவோ மனித உயிருக்கு ஆபத்து மற்றும் காயம் விளைவிக்கும் வகையில் பொது பாதையில் ஓட்டி வந்தார் என்பதை அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

iii) மேலும் எதிரி மேற்படி முரட்டுத்தனமான அல்லது கவனமற்ற செய்கையால் ஒருவருக்கு மரணத்தை விளைவித்தார் என்பது அரசு தரப்பில் தகுந்த சாட்சிகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா?

iv) எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் எல்லாவித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதே ஆகும்.

**11)** <u>பிரச்சனைக்கான தீர்வு மற்றும் காரணங்கள்</u>

இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனைகள் அனைத்தும் ஒன்றுக்கொன்று பிணைக்கப்பட்டிருப்பதால் அனைத்து பிரச்சனைகளும் ஒன்றாக தீர்வு காணப்படுகிறது.

**11.1)** சாட்சிகளை பரிசீலனை செய்யும் முன்பாக இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன் ஆக்க கூறுகளை பார்க்க வேண்டியது. சாலை விபத்து வழக்குகளில் ஒரு நபரை இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் குற்றவாளி என முடிவு செய்ய வேண்டும் என்பதால் அரசு தரப்பில் பின்வரும் கூறுகளை நிரூபிக்க வேண்டும்.

i) முதலாவதாக இறந்த நபர் விபத்தின் காரணமாக இறந்திருக்க வேண்டும்.

ii) இரண்டாவதாக எதிரி தான் விபத்திற்கு காரணமாக இருக்க வேண்டும்.

iii) மூன்றாவதாக எதிரியின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் அந்த விபத்து ஏற்பட்டிருக்க வேண்டும்.

**12)** முதலாவதாக விபத்து அரசு தரப்பில் சொல்லப்படும் இடத்தில் நடந்துள்ளது என்பதற்கும், இறந்த நபர் விபத்தின் காரணமாக தான் இறந்துள்ளார் என்பதற்கும் அரசு தரப்பில் இருந்து விசாரிக்கப்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில் இறந்துபோன சுரேஷ் தனது மகன் என்றும், சுமார்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:06 +0530

ஒன்றரை வருடத்திற்கு முன்பாக 2-ம் தேதி தனது மகன் சுரேஷ் அவருக்கு தெரிந்த புகழேந்தி என்பவரது இருசக்கர வாகனத்தில் மேலூர் சென்றுவிட்டு ஊருக்கு திரும்பும் வழியில் யூகோ வங்கி அருகே ஒரு டாடா வாகனத்தை வாசுதேவன் என்பவர் கவனக்குறைவாகவும், தவறான திசையிலும் ஓட்டிவந்து தன் மகன் வந்த வாகனத்தின் மீது மோதி தன் மகன் கீழே விழுந்து காயம்பட்டு கிடப்பதாக கேள்விபட்டு தான் உடனடியாக போய் பார்த்தபோது தன் மகன் சம்பவ இடத்திலேயே இறந்து கிடந்தார் என்றும், அவரது சடலத்தை மேலூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள் என்றும், இது சம்மந்தமாக காவல்நிலையத்தில் தான் புகார் செய்தார் என்றும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். பின்னர் சாட்சிகளாக விசாரிக்கப்பட்ட அ.சா.2, அ.சா.4, அ.சா.6 வரையிலான சாட்சிகள் அ.சா.1-ன் சாட்சியத்தை ஒத்துரைத்து டாடா ஏஸ் வாகனம் மோதி தான் சுரேஷ் என்பவர் இறந்தார் என்று சாட்சியம் அளித்துள்ளார்கள்.

**13)** அவர்களது சாட்சியத்தின் மூலம் சம்பவ இடத்தில் தான் விபத்து நடந்தது என்பதற்கான போலீசார் தயாரித்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.7 அமைந்துள்ளது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது அரசு தரப்பால் சொல்லப்பட்டுள்ள இடத்தில் தான் விபத்து நடந்துள்ளது என்பது தெளிவாகிறது. மேலும் அரசு தரப்பு வழக்கை ஒத்துரைக்கும் விதமாக விபத்து நடந்தது குறித்தும், விபத்து ஏற்படுத்திய வாகனத்தையும், விபத்தில் இறந்தவர் ஓட்டிவந்த வாகனத்தையும் பரிசோதனை செய்து அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5-ஐ பரிசீலனை செய்யும் போது விபத்தில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தெளிவாகிறது.

**14)** அ.சா.3-ன் சாட்சியத்தின் மூலம் அ.சா.ஆ.2 உடல் கூராய்வு அறிக்கையை பரிசீலனை செய்ததில் இறந்துபோன சுரேஷ் என்பவர் விபத்தின் காரணமாக தான் இறந்துள்ளார் என்று தெரியவருகிறது. மேலும் இறந்த நபர் விபத்தின் காரணமாக தான் இறந்தார் என்பதை நிரூபிப்பதற்கு கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 தனது சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி பகல் 12 மணிக்கு மேலூரில் பி.ஆர.சி.பஸ் டெப்போ அருகிலுள்ள கோகுலம் டீக்கடையில் பஸ்ஸிற்கு செல்வதற்காக நின்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது டாடா ஏ.சி வாகனம் வடக்கிலிருந்து தெற்குநோக்கி நல்ல வேகமாக வந்துகொண்டிருந்தது என்றும், அப்பொழுது பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் தெற்கிலிருந்து வடக்குநோக்கி செக்போஸ்ட் நோக்கி ரோட்டின் இடது ஓரமாக ஒருவர் சென்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது டாடா ஏ.சி வாகனம் வேகமாக வந்ததால் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில் மோதியது என்றும், அவ்வாறு



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:12 +0530

மோதியதில் பஜாஜ் டிஸ்கவர் வாகனத்தில் வந்தவருக்கு முகம் மற்றும் தலையில் அடிபட்டது என்றும், அதனால் பயங்கரமாக ரத்தம் வந்து அந்த இடத்திலேயே பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்தவர் இறந்துவிட்டார் என்றும், பஜாஜ் இருசக்கர வாகனமும் நொறுங்கிவிட்டது என்றும், பஜாஜ் இருசக்கர வாகனத்தில் வந்தவரின் பெயர் சுரேஷ் என்றும், அவர் கொங்கம்பட்டியை சேர்ந்தவர்கள் என்றும், அங்கிருந்தவர்கள் கூறினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர்களது சாட்சியத்தினை ஒத்துரைத்து பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.2-ல் விபத்தில் இறந்த சுரேஷ் என்ற நபர் சாலை விபத்தின் காரணமாக சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. ஆகவே விபத்து அரசு தரப்பில் சொல்லப்படும் இடத்தில் தான் நடந்தது என்றும், அந்த விபத்தின் காரணமாக தான் இறந்தவரின் இறப்பு ஏற்பட்டது என்று அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**15)** இரண்டாவதாக எதிரி தான் வாகனத்தை அஜாக்கிரதையாக ஓட்டி விபத்தை ஏற்படுத்தி இறப்பிற்கு காரணமானவர் என்பதை நிரூபிக்க அரசு தரப்பில் இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில் தனது மகன் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் யூகோ வங்கி அருகே ஒரு டாடா வாகனத்தை வாசுதேவன் என்பவர் கவனக்குறைவாகவும், தவறான திசையிலும் ஓட்டி வந்து சுரேஷின் வாகனத்தின் மீது மோதி அதனால் அவர் கீழே விழுந்து காயம்பட்டதாக கேள்விபட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார்.

**16)** அதன் பின்னர் விசாரிக்கப்பட்ட அ.சா.2 குணசேகரன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் கடந்த 02.03.2012-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் மேலூர் யூகோ பேங்க் அருகே நடந்துபோய் கொண்டு இருந்தார் என்றும், விபத்து நடந்ததை பார்த்தார் என்றும், பைக்கும், டாடா ஏசும் மோதி விபத்து என்றும், காயம்பட்டவரின் பெயர் தெரியாது என்றும், கொங்கம்பட்டியை சேர்ந்தவர் என்று சொன்னார்கள் என்றும், டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது என்றும், டாடா ஏஸ் வாகனம் தான் வேகமாக வந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் "டாடா ஏஸ் திருச்சி ரோட்டில் எந்த திசையை நோக்கி வந்தது என்று ஞாபகம் இல்லை.” என்று குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். அ.சா.2-ன் சாட்சியத்தின் மூலம் விபத்து ஏற்படுத்திய வாகனம் டாடா ஏஸ் என்று தெரியவருகிறது. ஆனால் அவர் தனது சாட்சியத்தில் எதிரி தான்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:17 +0530

அந்த வாகனத்தை ஓட்டி வந்தார் என்று சாட்சியம் அளிக்கவில்லை.

**17)** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சியான அ.சா.6 சிவலிங்கம் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்தவர் பெயர் வாசுதேவன் என்று தெரிந்துகொண்டேன் என்று சாட்சியம் அளித்துள்ளார். அவர் நீதிமன்றம் டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்த நபர் நீதிமன்றத்திற்கு இன்று வந்துள்ளாரா என்று கேள்வி கேட்டபோது "இன்று ஆஜர் ஆகியுள்ள நபர் போன்று தான் இருக்கிறது, வருடம் ஆகிவிட்டதால் என்னால் சரியாக சொல்ல இயலவில்லை." என்று பதில் அளித்துள்ளார். எனவே அரசு தரப்பில் எதிரி தான் டாடா ஏஸ் வாகனத்தை ஓட்டி வந்து விபத்து ஏற்படுத்தினார் என்று அ.சா.6 மூலம் நிரூபிக்கவில்லை.

**17)** மேலும் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகிய சாட்சிகள் தங்களது முதல் விசாரணை சாட்சியத்தில் டாடா ஏஸ் வண்டி ஓட்டி வந்தவர் யார் என்று தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்து அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டுள்ளார்கள்.

**18)** இவ்வழக்கில் அனைத்து சாட்சிகளும் டாடா ஏஸ் வாகனம் சுரேஷ் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக சாட்சியம் அளித்ததை தவிர எதிரி தான் அந்த வாகனத்தை ஓட்டிவந்தார் என்றும், எதிரியின் செய்கை கவனமின்மையாகவும், அஜாக்கிரதையாகவும், முரட்டுத்தனமாகவும் ஓட்டியதன் மூலமாக விபத்து ஏற்பட்டது என்று எந்தவொரு சாட்சியமும் அளிக்கப்படவில்லை.

**19)** பொதுவாக விபத்து ஏற்படும் வழக்கில் எதிரியின் அசட்டைத்தனமாக மற்றும் முரட்டுத்தனமாக அதிவேகமாக ஓட்டி வந்தும் விபத்தை ஏற்படுத்தி உள்ளார் என்பது தெளிவாக்கப்படவில்லை. அதனை உறுதிபடுத்தும் விதமாக அரசு தரப்பு வழக்கு அமையவேண்டும். அது இல்லை என்றால் அரசு தரப்பு வழக்கு பாதகமாகவும், அதில் ஏற்படும் சந்தேகங்கள் எதிரிக்கு சாதகமாகவும் அமையும், இவ்வாறு இருக்கையில் மாண்புமிகு உச்சநீதிமன்றம் பின்வரும் தீர்ப்பில்

"***State of Karnataka -vs- Sathish (1998) 8 SCC 493*** “4. Merely because the truck was being driven at a "high speed" does not bespeak of either "negligence" or "rashness" by itself. None of the witnesses examined by the prosecution could give any indication, even approximately, as to what they meant by "high speed". "High speed" is a relative term. It was for the prosecution to bring on record material to establish as to what it meant by "high



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:22 +0530

speed" in the facts and circumstances of the case. In a criminal trial, the burden of providing everything essential to the establishment of the charge against an accused always rests on the prosecution and there is a presumption of innocence in favour of the accused until the contrary is proved. Criminality is not to be presumed, subject of course to some statutory exceptions. There is no such statutory exception pleaded in the present case. In the absence of any material on the record, no presumption of "rashness" or "negligence" could be drawn by invoking the maxim "res ipsa loquitur".”

**20)** மேலும் மாண்புமிகு உச்சநீதிமன்றம் மற்றொரு வழக்கில் பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது. “***Ravi Kapur -vs- State of Rajasthan (2012) 9 SCC 285***

"18. In light of the above, now we have to examine if negligence in the case of an accident can be gathered from the attendant circumstances." We have already held that the doctrine of res ipsa loquitur is equally applicable to the cases of accident and not merely to the civil jurisprudence. Thus, these principles can equally be extended to criminal cases provided the attendant circumstances and basic facts are proved. It may also be noticed that either the accident must be proved by proper and cogent evidence or it should be an admitted fact before this principle can be applied. This doctrine comes to aid at a subsequent stage where it is not clear as to how and due to whose negligence the accident occurred. The factum of accident having been established, the Court with the aid of proper evidence may take assistance of the attendant circumstances and apply the doctrine of res ipsa loquitur. The mere fact of occurrence of an accident does not necessarily imply that it must be owed to someone's negligence. In cases where negligence is the primary cause, it may not always be that direct evidence to prove it exists. In such cases, the circumstantial evidence may be adduced to prove negligence. Circumstantial evidence consists of facts that necessarily point to negligence as a logical conclusion rather than providing an outright demonstration thereof.

**21)** எனவே மேற்கண்ட உச்சநீதிமன்ற தீர்ப்பு முடிவுகளை கருத்தில் கொண்டு பார்க்கும் பொழுது அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிகளை முழுமையாக பரிசீலனை செய்ததில் விபத்து ஏற்பட்டுவிட்டது என்பதாலும், உயிர் இழப்பு நேர்ந்துவிட்டது என்பதாலும், எதிரியின் அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவினால் தான் விபத்து ஏற்பட்டது என்றும் அனுமானம்



THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:26 +0530

கொள்ள இயலாது. எதிரியின் செய்கைக்கும், விபத்திற்கும் நேரடி தொடர்பு இருக்க வேண்டும். இவ்வழக்கில் எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவினாலும் தான் விபத்து ஏற்பட்டது என்பது சாட்சிகளின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை.

**22**) எனவே சம்பவ விபத்தானது எதிரி தனது டாடா ஏஸ் வாகனத்தை அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், அதிவேகமாவும் இயக்கி சுரேஷ் என்பவருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்று அரசு தரப்பு சாட்சிகளால் போதிய சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

**23)** முடிவாக எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்பதால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி இ.த.ச பிரிவுகள் 279, 304(A)-ன்படி குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து, குவிமுச பிரிவு 255(1)-ன் கீழ் எதிரியை விடுதலை செய்து, இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**24)** இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. அதனால் அது பற்றி உத்தரவு எதுவும் பிறப்பிக்கவில்லை.

**25)** மேலும் எதிரி குவிமுச பிரிவு 437(A)ன் கீழ் எழுதிக்கொடுத்துள்ள பிணைப்பத்திரம் 6 மாதங்கள் முடிவடைந்த பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு நீதிமன்ற கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் இன்று 2026- ம் ஆண்டு ஜீலை மாதம் 28-ம் தேதி அவையறிய பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:31 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>இணைப்பு</u>

<u>அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்</u> :-

| வரிசை எண் | விசாரிக்கப்பட்ட தேதி | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம்/சாட்சியின் தன்மை |
|---|---|---|---|
| அ.சா.1 | 17.10.2013 | அய்யணன் | புகார்தாரர் |
| அ.சா.2 | 18.08.2014 | குணசேகரன் | நேரில் பார்த்த சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.3 | 18.08.2014 | முரளிபால் கண்ணன் | மருத்துவர் |
| அ.சா.4 | 18.08.2014 | சிவராஜன் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.5 | 18.08.2014 | சுப்பிரமணி | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.6 | 02.09.2016 | சிவலிங்கம் | நேரில் பார்த்த சாட்சி |
| அ.சா.7 | 02.09.2016 | செல்வகுமார் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.8 | 10.03.2017 | விஜய் | மோட்டார் வாகன ஆய்வாளர் |
| அ.சா.9 | 15.03.2019 | பழனியப்பன் | முதல்நிலை காவலர் |
| அ.சா.10 | 15.03.2019 | முத்துக்குமார் | பார்வை மகஜர் சாட்சி |
| அ.சா.11 | 02.02.2026 | பாலமுருகன் | முதல்நிலை புலன்விசாரணை அதிகாரி |
| அ.சா.12 | 29.06.2026 | மாடசாமி | புலன்விசாரணை அதிகாரி |

<u>அரசு தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்</u> :-

| வரிசை எண் | நிரூபிக்கப்பட்டது/ சான்றளிக்கப்பட்டது | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | அ.சா.1 | புகார் மனு |
| அ.சா.ஆ.2 | அ.சா.3 | உடல் கூராய்வு சான்று |
| அ.சா.ஆ.3 | அ.சா.7 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | அ.சா.8 | TN 58 T 3717 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.5 | அ.சா.8 | TN 59 BZ 3233 என்ற வாகனத்தின் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.6 | அ.சா.11 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.7 | அ.சா.11 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.8 | அ.சா.11 | பிரேத விசாரணை அறிக்கை |

<u>அரசு தரப்பு சான்றுப்பொருட்கள்:- இல்லை</u>

<u>எதிரி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்,</u>

<u>குறியீடப்பட்ட சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்</u>: இல்லை

<u>குறிப்பு</u>

1) வழக்கு விசாரணைகாலத்தில், எதிரி நீதிமன்ற பிணையிலிருந்துள்ளார்.

2) எந்தவொரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3) வழக்கின் முடிவு காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது

4) தீர்ப்பின் நகல், மாண்புமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.07.28 06:54:37 +0530